

வேலூர் மாவட்டம், காட்பாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் தணிகாசலம் மகன் இல்ல மணவிழாவில் கழக பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி கலந்துகொண்டு வாழ்த்தினார்கள். உடன் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.





வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மத்திய ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர் பெ.முருகேசன் & விமலா இவர்களின் இல்ல திருமண விழாவில், வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். புரவலர் துரைசிங்காரம், மேற்கு, மத்திய ஒன்றியச் செயலாளர்கள் எல். இரவிச்சந்திரன், கே. சீதாராமன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் சி.கோபி. மாவட்ட கவுன்சிலர் எம்.அசோக்குமார், சா. பரிமளம், கே.கே. சிட்டிபாபு, கே.குப்பன் ஆகியோரும் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

### பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக 215 இடங்களில் நிவாரண மையங்கள்! 110 இடங்களில் உணவு தயாரிக்கும் பணி!

# 701 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்! 29,686 பேர் பயன்!

## 5,38,100 நபர்களுக்கு இதுவரை உணவு வழங்கப்பட்டுள்ளது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக்.29-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக 215 இடங்களில் நிவாரண மையங்கள் அமைத்து 110 இடங்களில் உணவு தயாரிக்கும் பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும், கடந்த 17.10.2025 முதல் 27.10.2025 வரை 701 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 29,686 நபர்கள் பயனடைந்துள்ளனர் எனவும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 5,38,100 நபர்களுக்கு இதுவரை உணவு வழங்கப்பட்டுள்ளது எனவும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (28.10.2025) கோடம்பாக்கம் பத்மராம் திருமண மண்டபத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 10, 11 மற்றும் 13 ஆகிய மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிவாரணப் பணிகள் மற்றும் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை**

வடகிழக்கு பருவமழையினையொட்டி பெருநகர சென்னை மாநகராட்சியில் குறிப்பாக மண்டலம் 10, 11 மற்றும் 13 ஆகிய மண்டலங்களில் 42 மாநகராட்சி வார்டுகள் இருக்கின்றது. இந்த வார்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகள், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்



குறித்து கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.'

முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பருவமழையின்போது எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து குறிப்பாக சேவை துறைகளை ஒருங்கிணைத்து பணிகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

கடந்த 20 நாட்களுக்கு முன்பு நகராட்சி நிர்வாகத்துறை, ஊரகவளர்ச்சித்துறை மற்றும் பல சேவை துறைகளின் உயரலுவலர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடத்தப்பட்டது. அவர்கள் அந்தந்த மாவட்டங்களில் என்ன மாதிரியான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி, குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம், நகர்ப்புற மேம்பாட்டு வாரியம், தேசிய நெடுஞ்சாலைத் துறை போன்ற ஒன்றிய, மாநில சேவை துறைகளை ஒருங்கிணைத்து கூட்டம் தற்போது நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் 500க்கும் மேற்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். 42 மாநகராட்சி வார்டுகளில் இதுவரை நிறைவேற்றப்பட்ட பணிகள், வடகிழக்கு பருவமழை எப்படி எதிர்கொள்வது குறித்தான கருத்துக்களும் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

சென்னையில் வடகிழக்கு பருவமழை தொடங்கி தற்போது வரை 26.78 செ.மீ. அளவிற்கு மழை பெய்திருக்கிறது. மேலும் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் அடையாற்றங்கரையோரம் வழியாக கடலில் தடையின்றி கலப்பதற்கு ஏதுவாக முதலமைச்சர் அவர்கள் ஒரு வார காலமாக ஆய்வு மேற்கொண்டு மிகப்பெரிய அளவில் தீர்வு காணப்பட்டது.

செம்பரம்பாக்கம் ஏரியின் உபரிநீர் படிப்படியாக திறந்து விடப்பட்டு தற்போது 750 கன அடி அளவில் உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளது. அதோடு அந்த உபரி நீர் மற்றும் மழைநீரும் சேர்த்து 1,550 கனஅடி அளவில் உபரிநீர் கடலில் கலந்து வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக அடையாறு முகத்துவாரத்தை ஆய்வு செய்து ஒட்டுமொத்தமாக 40,000 கன அடி உபரிநீர் சேர்ந்து வந்தாலும் கடலில் கலப்பதற்கு ஏதுவாக முகத்துவாரத்தை தற்போது 150 மீ அளவிற்கு தூர்வாரி ஆழப்படுத்தியிருக்கும் நிலையில் தற்போது 25க்கும் மேற்பட்ட JCB இயந்திரங்கள் மூலம் கூடுதலாக 250மீ அளவிற்கு அகலப்படுத்தும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

மோந்தா புயல் காரணமாக சென்னை எண்ணூரில் அதிகபட்சமாக 14.67 செ.மீ அளவிற்கு மழை பெய்திருக்கிறது. குறைந்தபட்சமாக ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முகலிவாக்கம் பகுதியில் 8.80 மி.மீ அளவிற்கு மழை பெய்திருக்கிறது.

சென்னையில் சராசரியாக 6 செ.மீ அளவிற்கு மழை பெய்திருக்கிறது. பெருநகர சென்னை மாநகராட்சி 215 இடங்களில் நிவாரண மையங்கள் அமைத்து 110 இடங்களில் உணவு தயாரிக்கும் பணிகள் ஏற்பாடு செய்திருக்கிறது. இதில் 22,000 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். மேலும் 299 தூர்வாரும் இயந்திரங்கள், 73 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள், 181 ஜெட்ராடிங் வாகனங்கள் 45 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சு வாகனங்கள் என்று 711 கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் களப்பணியில் இருந்துக் கொண்டிருக்கிறது.

பெருநகர குடிநீர் வாரியத்தில் மட்டும் 2,149 களப்பணியாளர்கள் களப்பணியில் இருந்து வருகிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை சார்பில் கடந்த 17.10.2025 முதல் 27.10.2025 வரை 701 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 29,686 நபர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் 100 HP மோட்டார் பம்புகள் 160 எண்ணிக்கையில் மழைநீர் வெளியேற்றுவதற்கு தயார் நிலையில் இருந்து வருகிறது. 1,496 சாதாரண மோட்டார் பம்புகள் தயார் நிலையில் இருக்கின்றது.

இந்த 3 மண்டலங்களில் மட்டும் 21 இடங்களில் உணவு தயாரிக்கும் கூடங்கள் மூலம் உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. நிவாரண முகாம்கள் 215 எண்ணிக்கையில் இருந்தாலும் இந்த 3 மண்டலங்களில் 42 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இன்றைக்கு அனைத்து பணிகளும் மிகச் சிறப்பாக தயார் நிலையில் இருந்து வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 5,38,100 நபர்களுக்கு காலை, மாலை என்று உணவு வழங்கியிருக்கிறார்கள்.

யாருக்கெல்லாம் உணவு மற்றும் மருத்துவ உதவிகள் தேவைப்படுகிறதோ அவர்கள் அனைவரும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வழங்கப்படும் முகாம்கள் மூலம் பயன் அடையலாம்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம் க.கணபதி, மயிலை த.வேலு, அசன் மௌலானா, ஜெ.கருணாநிதி, பிரபாகர் ராஜா, கண்காணிப்பு அலுவலர்கள் சிவஞானம், விசாகன், துணை ஆணையர் (பணிகள்) சிவகிருஷ்ணமூர்த்தி, வட்டார துணை ஆணையர்கள்எச்.ஆர்.கௌசிக், அஃதாப் ரசூல், நிலைக்குழுத் தலைவர் தனசேகரன், மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், நொளம்பூர் ராஜன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், முக்கிய சேவை துறைகள் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2, 17 வது வார்டு சார்பாக வார்டு சபா சிறப்பு கூட்டம் மண்டல தலைவர் வார்டு மாமன்ற உறுப்பினருமான இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் மாநகராட்சி உதவி ஆணையர் திருமதி சொர்ணலதா முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வார்டில் உள்ள பொதுமக்கள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டு வார்டில் நடைபெற வேண்டிய பணிகள் குறித்து கோரிக்கை மனுக்கள் வழங்கினார்கள். பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என மண்டலத் தலைவர் நன்றி கூறி சிறப்புரை ஆற்றினார். மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் மாநகராட்சி ஊழியர்கள். என ஏராளமானவர் திரண்டு இருந்தனர்.

### விஜயகுமார் தலைமை! செஞ்சி ஒன்றியம் - கெங்கவரம் ஊராட்சியில்

# 1.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார மருத்துவமனைக் கட்டிடம்!

## திட்டப் பணியை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 29-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கெங்கவரம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி துறை சார்பில் 15 வது மானிய நிதி குழு திட்டத்தின் கீழ் 1 கோடியே 45 லட்சத்தி 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார மருத்துவமனை கட்டிடம் கட்டுவதற்கு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர் சதியா கார்த்திகேயன், ஊராட்சி மன்ற தலைவர்மகேஸ்வரி பொற்ச்செழியன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சத்தியமங்கலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 1 கோடியே 45 லட்சத்தி 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு பணியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து நிகழ்ச்சிக்கு வருகை தந்த பொதுமக்களிடம் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குறைகளை கேட்டறிந்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன்,செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன்,அரசு மருத்துவர் கவிக்கோ தமிழரசன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர், ஒன்றிய பொறியாளர் ஆனந்தி, மாவட்டக் கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய நிர்வாகிகள் வாசு, அய்யாதுரை, திருநாவுக்கரசு, ஒன்றியமாணவரணி அமைப்பாளர் திருமாவளவன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் தமிழ்ச்செல்வி தங்கதுரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனலட்சுமி கணபதி, குமார், சக்திவேல், ஊராட்சி நிர்வாகிகள் சங்கர், கணேசன், அன்பழகன் ஊத்துக்குட்டை கணேசன், ரமேஷ், சதாசிவம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# விடுமுறை நாட்களில் 940 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

சென்னை, அக்.29

வார இறுதி நாட்களை முன்னிட்டு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 940 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளது. கிளாம்பாக்கத்தில் இருந்து அக்டோபர் 31ல் 340 சிறப்புப் பேருந்துகளும், நவம்பர் 1ல் 350 பேருந்துகளும், கோயம்பேட்டில் இருந்து அக்டோபர் 31ல் 55 சிறப்புப் பேருந்துகளும், நவம்பர் 1ல் 55 சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்படவுள்ளது.

31/10/2025 (வெள்ளிக்கிழமை) முகூர்த்தம் 01/11/2025 (சனிக்கிழமை) மற்றும் 02/11/2025 (ஞாயிறுக் கிழமை) மற்றும் வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி. தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 31/10/2025 (வெள்ளிக்கிழமை) அன்று 340 பேருந்துகளும், 01/11/2025 (சனிக்கிழமை) 350 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 31/10/2025 வெள்ளிக் கிழமை அன்று 55 பேருந்துகளும் 01/11/2025 சனிக்கிழமை அன்று 55 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்து இயக்க திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 100 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதாவரத்திலிருந்து 31/10/2025 மற்றும் 01/11/2025 ஆகிய நாட்களில் 20 பேருந்துகளும் சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிடதிட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 6,299 பயணிகளும் சனிக்கிழமை 3,562 பயணிகளும் மற்றும் ஞாயிறு அன்று 6,570 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க. சுப்பு**

**அக்டோபர் 29 (2011)**



கழகத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.

மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.

சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக திகழ்ந்து திறம்பட பேசி வாதிட்டவர்.

கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைவராகவும் பணியாற்றினார்.

"பகைவரையும், வசீகரிக்கக்கூடிய பேச்சாற்றலும், வாதத்திறமையும் பெற்றவர் சுப்பு" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**